## நபிமார்களின் அடிப்படைப் பண்புகள்

அல்லாஹ் தஆலாவின் நபிமார்களுக்கென்றே கட்டாயம் இருக்கவேண்டிய சில பண்புகள் உள்ளன, இவற்றைப்பெற்றிருப்பதில் அனைத்து நபிமார்களும் ஒரே மாதிரியானவர்களாக இருப்பார்கள், இவை நபித்துவம் மற்றும் இறைத்தூதர்களுக்கான ஒரு அடிப்படை நிபந்தனையைப்போன்றவையாகும், அவையாவன:

### உண்மையை நிலைநாட்டுதல்

அனைத்து நபிமார்களும் இறைத்தூதர்களும் உண்மையாளர்களாகவே இருப்பார்கள். எந்த ஒரு பொய்யானவற்றையும் அவர்களுடன் தொடர்பு படுத்தவது என்பது இயலாத ஒன்றாகும், அல்லாஹ் தஆலாவே அதற்கான சாட்சியும் கூறுகின்றான்:

وَصَدَقَ ٱلۡمُرۡسَلُونَ ۝٥٢ (يس:52)

*பொருள்: இறைத்தூதர்கள் வாக்களித்திருந்த உண்மையும் (இதுவே) (யாசீன்:52)*

அனைத்து நபிமார்களின் வாழ்க்கை மற்றும் அவர்களுடைய அணுகுமுறை இதற்கான ஆதாரமாக விளங்குகிறது. இறுதி நபியான ஹஸ்ரத் முஹம்மத் ﷺ அவர்களை மக்காஹ்வாசிகளான ஃகுரைஷிகள் ஆதாரங்கள் வெளிப்படுவதற்கு முன்பிருந்தே ஸாதிஃக் மற்றும் அமீன் என்ற பட்டங்களைக் கொண்டு அவர்களைக் கண்ணியப்படுத்தியிருந்தனர்.

### அமானிதம்

அனைத்து நபிமார்களும் அமானிதத்தைக் கடைபிடிப்பவர்களாக இருந்தனர், அவர்கள் ஒரு கடுகளவும் அமானிதப்பண்புக்கு புறம்பாக செய்வது என்பது இயலாத ஒன்று என்ற வகையில் அவர்கள் வெளிப்படையாகவும் மனதாலும் தூய்மையான பண்பினைக்கொண்டவர்கள். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

وَمَا كَانَ لِنَبِيٍّ أَن يَغُلَّ ۝١٦١ (آل عمران:161)

*பொருள்: வஞ்சனை செய்வது எந்த ஒரு நபிக்குரிய செயலாகவும் இருக்க முடியாது (ஆலு இம்ரான்:161).*

### புத்திக்கூர்மையும் அறிவாற்றலும்

அல்லாஹ்வுடைய திருத்தூதர்களுடைய அடிப்படையான பொறுப்பு மனித சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் அல்லாஹ்வுடைய போதனைகளை

www.uzaifalahi.com

எடுத்துரைப்பதாகும். இவ்வகையில், சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப் பினருடனும் அவர்களுக்கு நேரடித்தொடர்பு உண்டாகிவிடுகிறது மற்றும் அனைத்து விதமான பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவேண்டியும் இருக் கின்றது. ஆகவே, தங்களுடைய பொறுப்பினை நல்ல முறையில் நிறை வேற்றுவதற்காகவும் அதனை நிறைவேற்றுவதில் காணப்படும் எண்ணற்ற சவால்களை எதிர்கொள்வதற்காகவும் அல்லாஹ் தஆலா அவர்களுக்குத் தனிச்சிறப்புடனான புத்திக்கூர்மை, அறிவாற்றல் மற்றும் கூர்நோக்கினை யும் வழங்கியுள்ளான்.

ஹஜ்ரத் முஹம்மத் ﷺ அவர்கள் இன்னும் இறுதி நபியாக பிரகடனப்படுத் தப்படுவதற்கு முன்பாகவே ஃகுரைஷிகளிடையே கஅபாவின் சீரமைப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு அதன் சுவரில் ஹஜருல் அஸ்வத் பதிக்கும் விஷயத்தில் சச்சரவு ஏற்பட்டு சமூகங்களிடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுவிட்டது. ஹஜ்ரத் முஹம்மத் ﷺ அவர்கள் தன்னுடைய விழிப்புட னான அறிவாற்றலின் மூலம் இப்பிரச்சினைக்கான ஒரு தீர்வினை ஏற்ப டுத்தி அந்த சச்சரவினை எவ்வகையில் முடிவுக்குக் கொண்டுவந்தார்கள் என் றால் அனைத்துத் தரப்பினரும் இந்தத் தீர்வினால் மகிழ்ச்சியும் மனநிறை வும் கொண்டனர். அவர்கள் ﷺ தம்முடைய போர்வையினை விரித்து அதன்மேல் ஹஜருல் அஸ்வதை எடுத்துவைத்து அனைத்து சமூகங்களின் தலைவர்களையும் நான்கு மூலைகளிலும் தங்கள் கைகளால் பற்றிக்கொண்டு தூக்கி உயர்த்துமாறு கூறி, அந்த ஹஜருல் அஸ்வத் சுவரின் உயரத்திற்குத் தூக்கப்பட்டபின் அவர்கள் ﷺ தன் கைகளினால் எடுத்து சுவரில் பதித்து விட்டார்கள். ஒரு நிலைமையை உணர்ந்துகொள்வது மற்றும் கூர்நோக்கின் இவ்வகையிலான ஒரு உதாரணம் ஹஜ்ரத் இப்ராஹீம் (அ) அவர்களு டைய வாழ்க்கையிலும் நமக்குக் கிடைக்கின்றது. தானே கடவுள் என்று கூறிக்கொண்டிருந்த நம்ரூதிடம் அல்லாஹ்வின் பண்புகள் மற்றும் வல்ல மையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது ஹஜ்ரத் இப்ராஹீம் (அ) அவர்கள் கூறினார்கள், என்னுடைய இரட்சகன் யாரெனில், அவன் மட் டுமே வாழ்க்கையும் மரணத்தையும் அளிக்கும் வல்லமையுடையவன் என்று கூற, ஆட்சியதிகாரம் மற்றும் செல்வத்தின் கர்வத்தினால் மதியிழந்து விட்டிருந்த நம்ரூத் ஹஜ்ரத் இப்ராஹீம் (அ) அவர்கள் கூறியதை உணர்ந்து கொள்ளாமல் மதிகெட்ட நிலையில் தன்னுடைய அறியாமையை நிரூபிக் கும் வகையில் திடீரென சிறைச்சாலையிலிருந்து இரண்டு பேரை அழைத்து வரச்சென்னான், அவர்களில் ஒருவரைக் கொன்றுவிட்டான், மற்றவனை விட்டுவிட்டான், பின்பு கூறினான், பாருங்கள், ஒருவனுக்கு வாழ்வளிப் பதும் ஒருவனுக்கு மரணத்தை அளிப்பதும் என்னுடைய அதிகாரத்தில் உள்ளது. ஹஜ்ரத் இப்ராஹீம் (அ) அவர்கள் அல்லாஹ் தனக்கு அளித்தி ருந்த அறிவாற்றலின் அடிப்படையில் உணர்ந்துகொண்டார்கள், இவன்

www.uzairfalahi.com

எந்த அளவிற்கு மதிகெட்டவன் என்று, அவனுடைய மனப்பாங்கு மற்றும் சிந்திக்கும் விதத்திலேயே கூறினார்கள், என்னுடைய இறைவன் சூரியனை கிழக்கு திசையிலிருந்து உதிக்கச்செய்கிறான், நீ கடவுள் எனக்கூறிக்கொள்ளும் வகையில் உன்னால் முடியுமானால் சூரியனை மேற்கிலிருந்து உதிக்கச்செய்துகாட்டு. இதனைக்கேட்ட நம்ரூத் நிலை குலைந்துவிட்டான், அல்லாஹ் கூறுகிறான்:

أَلَمْ تَرَ إِلَى الَّذِي حَاجَّ إِبْرَاهِيمَ فِي رَبِّهِ أَنْ آتَاهُ اللَّهُ الْمُلْكَ إِذْ قَالَ إِبْرَاهِيمُ رَبِّيَ الَّذِي يُحْيِي وَيُمِيتُ قَالَ أَنَا أُحْيِي وَأُمِيتُ قَالَ إِبْرَاهِيمُ فَإِنَّ اللَّهَ يَأْتِي بِالشَّمْسِ مِنَ الْمَشْرِقِ فَأْتِ بِهَا مِنَ الْمَغْرِبِ فَبُهِتَ الَّذِي كَفَرَ وَاللَّهُ لَا يَهْدِي الْقَوْمَ الظَّالِمِينَ ﴿٢٥٨﴾ (البقرة: 258)

*பொருள்: இப்ராஹீமுடைய இரட்சகன் யார் என்பது குறித்து அவருடன் தர்க்கம் புரிந்தவனை நீர் கவனிக்கவில்லையா? அல்லாஹ் அவனுக்கு ஆட்சியதிகாரம் வழங்கியிருந்த காரணத்தாலேயே அவன் தர்க்கம் புரிந்தான், எவன் வாழ்வையும் மரணத்தையும் அளிக்கின்றானோ அவனே என்னுடைய அதிபதி, என இப்ராஹீம் கூறியதற்கு, நானும் வாழ்வையும் மரணத்தையும் அளிக்கின்றேனே என்று அவன் கூறினான். அதற்கு இப்ராஹீம் அப்படியானால் அல்லாஹ் சூரியனை கிழக்கு திசையிலிருந்து உதிக்கச் செய்கிறான், நீ அதனைச் சற்று மேற்கிலிருந்து உதிக்கச்செய் என்று கூறினார். (இதைக்கேட்ட மாத்திரத்தில்) சத்தியத்தை மறுத்த அவன் திகைத்துப் போனான், அல்லாஹ் அக்கிரமம் புரிபவனை நேர்வழிப்படுத்துவதில்லை. (அல் பஃகுரஹ்: 258)*

அல்லாஹ் தன்னுடைய வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டளைகளை தன் அடியான்களுக்கு எடுத்துரைப்பதற்காக அவர்களிலிருந்தே ஒருவரைத் தன்னுடைய தூதராகத் தேர்ந்தெடுக்கின்றான் மற்றும் அவருக்கு நபித்துவம் அல்லது தன்னுடைய தூதர் என்ற அந்தஸ்தையும் அளிக்கின்றான். இவ்வகையில். ஒரு பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் அந்தப் பொறுப்பை நிறைவேற்றத்தவறுவது என்பது எவ்வாறு இருக்கமுடியும்? அல்லாஹ்வுடைய ஒரு தூதர் அவனுடைய வழிகாட்டுதல்களை அவனுடைய அடியார்களிடம் கொண்டு சேர்க்காமலிருப்பது என்பது அல்லது அதிலிருந்து சில செய்திகளை மறைத்துவிடுவதோ அல்லது இப்பொறுப்பினை நிறைவேற்றத்தவறிவிடுவதோஅல்லது நிறைவேற்றுவதில் அக்கறை காட்டாமலிருப்பதோ இயலாத ஒன்றாகும். அல்லாஹ் கூறுகிறான்:

مَا عَلَى الرَّسُولِ إِلَّا الْبَلَاغُ ﴿٩٩﴾ (المائدة:99)

*பொருள்: தூதுச் செய்தியை எடுத்துரைப்பதே தூதரின் பொறுப்பாகும் (அல் மாயிதா:99)*



www.uzairfalahi.com

يَٰٓأَيُّهَا ٱلرَّسُولُ بَلِّغۡ مَآ أُنزِلَ إِلَيۡكَ مِن رَّبِّكَۖ ﴿٦٧﴾ (المائدة:67)

*பொருள்: இறைத்தூதரே, உம்முடைய இறைவனிடமிருந்து உம்மீது இறக்கிவைக்கப்பட்டவற்றை மக்களுக்கு எடுத்துரைத்துவிடுவீராக (அப் மாயிதா:67).*

*ஹஜ்ரத் நூஹ் (அ) அவர்களைப்பற்றி திருக்ஃகுர்ஆன் கூறுகின்றது:*

قَالَ يَٰقَوۡمِ لَيۡسَ بِي ضَلَٰلَةٞ وَلَٰكِنِّي رَسُولٞ مِّن رَّبِّ ٱلۡعَٰلَمِينَ ﴿٦١﴾ أُبَلِّغُكُمۡ رِسَٰلَٰتِ رَبِّي وَأَنصَحُ
لَكُمۡ وَأَعۡلَمُ مِنَ ٱللَّهِ مَا لَا تَعۡلَمُونَ ﴿٦٢﴾ (الأعراف:61-62)8

*பொருள்: அதற்கு நூஹ் சொன்னார், என்னுடைய சமுதாயத்தவரே, நான் எந்த வழிகேட்டிலும் மூழ்கியிருக்கவில்லை, நான் அகிலத்தாருடைய அதி பதியின் தூதனாக இருக்கின்றேன். நான் என் இறைவனின் தூதுச்செய்தி களை உங்களுக்கு எடுத்துரைக்கிறேன். உங்களுக்கு நலம் நாடுபவனாகவும் இருக்கின்றேன், மேலும், நீங்கள் அறியாதவற்றையெல்லாம் அல்லாஹ் விடமிருந்து நான் அறிகின்றேன். (அல் ஆராஃப்:61,62).*

*ஹஜ்ரத் முஹம்மத் ﷺ அவர்கள்மீது கீழ்வரும் வசனம்:*

وَأَنذِرۡ عَشِيرَتَكَ ٱلۡأَقۡرَبِينَ ﴿٢١٤﴾ (الشعراء:214)

*பொருள்: உம்முடைய நெருங்கிய உறவினர்களை எச்சரிக்கை செய்வீராக (அஷ்ஷுஅரா:214), அருளப்பட்டபோது இறைத்தூதர்ﷺ அவர்கள் ஃகுரை ஷிகளை நேக்கிக் கூறினார்கள், ஃகுரைஷி சமூகத்தோரே, வாருங்கள் உங்கள் உயிர்களை அல்லாஹ்வுடன் பேரம் பேசிக்கொள்ளுங்கள், நான் அவனுடைய பிடியிலிருந்து உங்களை ஒருபோதும் காப்பாற்ற முடியாது. அப்து மனாஃபின் சந்ததிகளே நான் அல்லாஹ்வுக்கு எதிராக உங்களுக்கு எதையும் செய்யும் சக்தியற்றவனாக இருக்கிறேன். அப்பாஸ் பின் அப்துல் முதல்லிப் அவர்களே நான் உங்களுக்கு எவ்வகையிலும் பயனுள்ளவனாக இருக்கமாட்டேன் (புக்ஹாரி).*

* * *

www.uzairfalahi.com